பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

03 02 2025 **MONDAY** 7 15 **AM**

ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. வக்ஃப் சட்டதிருத்த மசோதா குறித்த நாடாளுமன்ற கூட்டுக்குழுவின் அறிக்கை மக்களவையில் இன்று தாக்கல் செய்யப்படுகிறது.

2. மத்திய பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ள சலுகைகள் புதிய வரி விதிப்பு முறையை பின்பற்ற வழிவகுக்கும் என்று மத்திய நேரடி வரிகள் வாரியத் தலைவர் திரு. ரவி அகர்வால் கூறியுள்ளார்.

3. தில்லி சட்டப்பேரவை தேர்தலுக்கான பிரச்சாரம் இன்று மாலையுடன் நிறைவடைகிறது.

4. பிரயாக்ராஜில் நடைபெற்று வரும் மகா கும்பமேளாவில் இன்றும் லட்சக்கணக்கானோர் திரிவேணி சங்கமத்தில் புனித நீராடி வருகின்றனர்.

5. இந்தியா - இங்கிலாந்து இடையேயான ஐந்தாவது மற்றும் இறுதி டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா 150 ரன் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றுள்ளது.

>>>>><<<<<

வக்ஃப் சட்டதிருத்த மசோதா குறித்த நாடாளுமன்ற கூட்டுக்குழுவின் அறிக்கை மக்களவையில் இன்று தாக்கல் செய்யப்படுகிறது.

கடந்த 31ஆம் தேதி தொடங்கிய நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடரில் குடியரசுத்தலைவர் உரைக்கு பிறகு, 1ஆம் தேதி மத்திய அரசின் வரும் நிதியாண்டிற்கான பட்ஜெட் தாக்கல்செய்யப்பட்டது.

அதன்பின், இரு அவைகளும் இன்று கூடும்போது குடியரசுத்தலைவரின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் மீதான விவாதம் தொடங்குகிறது.

அத்துடன், வக்ஃப் வாரிய சட்டதிருத்தம் தொடர்பாக பிஜேபி உறுப்பினர் திரு. ஜெகதாம்பிகா பால் தலைமையில் அமைக்கப்பட்ட நாடாளுமன்ற கூட்டுக்குழுவின் அறிக்கை மக்களவையில் இன்று தாக்கல் செய்யப்படவுள்ளது.

>>>>><<<<<

நாட்டில் சட்டவிரோதமாக குடியேறியவர்கள், தேர்தல் அரசியலில் பாதிப்பு ஏற்படுத்துவதை அனுமதிக்க முடியாது என்று குடியரசு துணைத்தலைவர் திரு. ஜெக்தீப் தங்கர் கூறியுள்ளார்.

புதுதில்லியில் பட்டய கணக்காளர் அமைப்பின் மாநாட்டில் பேசிய அவர், நாட்டில் தற்போது காணப்படும் சவால்களை எதிர்கொள்ள இளைஞர்கள் முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

இந்தியாவின் வளர்ச்சியை விரும்பாத சிலர் பரபரப்புகளை ஏற்படுத்தும் போக்கை முடிவுக்கு கொண்டுவர இளைஞர்கள் பாடுபட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதாரத்திற்கு பயனளிக்கும் விதமாக, பொருளாதார தேசப்பற்றை பின்பற்ற வேண்டியது அவசியம் என்றும் திரு. ஜெக்தீப் தங்கர் வலியுறுத்தினார்.

>>>>><<<<<

தில்லியில் நடைபெறவுள்ள வேவ்ஸ் உச்சிமாநாடு, படைப்பாற்றல் பொருளாதாரத்திற்கு பெரும் ஊக்கமளிப்பதாக அமையும் என்று தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு. எல். முருகன் கூறியுள்ளார்.

மைசூரில் நடைபெற்ற சர்வதேச குறும்பட திருவிழாவில் பேசிய அவர், அனிமேஷன், காமிக்ஸ் தொழில்துறையில் இந்தியா முன்னணி நாடாக திகழ்வதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டு வருவதாக தெரிவித்தார்.

படப்பிடிப்புக்கு பிந்தைய பணிகளை மேற்கொள்வதற்கான வாய்ப்பு, தற்போது இந்திய படைப்பாளர்களுக்கு அதிக அளவில் வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த துறையில் நாடு 9 புள்ளி ஏழு சதவீத வளர்ச்சியை அடைந்திருப்பதாக கூறிய அவர், 2027ஆம் ஆண்டுக்குள் இது 73 பில்லியன் டாலர் அளவுக்கு உயரும் என்றும் நம்பிக்கை தெரிவித்தார்.

அனிமேஷன் மற்றும் இணையதள விளையாட்டுக்களில் திறன்மிக்க மற்றும் தொழில்நுட்ப வல்லமை பெற்ற மனித சக்தியை உருவாக்க வேவ்ஸ் மாநாடு உதவும் என்றும் திரு. எல். முருகன் கூறினார்.

>>>>><<<<<

ஆண்டு வருமானமாக 12 லட்சம் ரூபாய் வரை பெறுவோருக்கு வருமான வரி விலக்கு அளிக்கப்பட்டிருப்பது 90 சதவீத வரி செலுத்துவோர், புதிய வரி விதிப்பு முறையை பின்பற்ற வழிவகுக்கும் என்று மத்திய நேரடி வரிகள் வாரியத் தலைவர் திரு. ரவி அகர்வால் தெரிவித்துள்ளார்.

செய்தி நிறுவனம் ஒன்றுக்கு பேட்டியளித்த அவர், புதிய வரிவிதிப்பு முறையில் பழைய வரி விதிப்பில் உள்ள கழிவுகள் அல்லது விலக்குகள் அனுமதிக்கப்படமாட்டாது என்று கூறினார்.

மேலும் புதிய முறை, வரி செலுத்துவோர் தங்களது கணக்குகளை எளிமையாக கணக்கிட்டு, தணிக்கையாளர்களின் உதவியின்றி தாங்களாகவே வருமான வரி கணக்கை தாக்கல் செய்ய உதவும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதுவரை 75 சதவீத தனிநபர்கள் புதிய வரிவிதிப்பு முறையை பின்பற்றியிருப்பதாகவும் திரு. ரவி அகர்வால் கூறினார்.

>>>>><<<<<

தில்லி சட்டப்பேரவை தேர்தலுக்கான பிரச்சாரம் இன்று மாலையுடன் நிறைவடைகிறது.

இதையொட்டி, வேட்பாளர்கள் வீதி வீதியாக சென்று வாக்காளர்களை சந்தித்து ஆதரவு திரட்டி வருகின்றனர்.

பல்வேறு கட்சிகளின் தலைவர்களும், தங்களது வேட்பாளர்களுக்கு ஆதரவாக இறுதிகட்ட பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

70 உறுப்பினர்களைக் கொண்ட தில்லி சட்டப்பேரவைக்கு நாளை மறுநாள் நடைபெறவுள்ள தேர்தலில், பிஜேபி, ஆம் ஆத்மி, காங்கிரஸ் கட்சிகளுக்கு இடையே போட்டி நிலவுகிறது.

இத்தேர்தலில் பதிவாகும் வாக்குகள் வரும் 8ஆம் தேதி எண்ணப்படவுள்ளன.

>>>>><<<<<

தில்லி சட்டப்பேரவை தேர்தலில் தங்களது பிரச்சாரத்திற்கு பிஜேபி இடையூறு ஏற்படுத்துவதாக ஆம் ஆத்மி கட்சி தெரிவித்த குற்றச்சாட்டை தேர்தல் ஆணையம் மறுத்துள்ளது.

இதுதொடர்பாக, ஆம் ஆத்மி கட்சியின் ஒருங்கிணைப்பாளர் திரு. அரவிந்த் கெஜ்ரிவால் தெரிவித்த புகாருக்கு பதிலளித்துள்ள தில்லி தலைமை தேர்தல் அதிகாரி, ஆம் ஆத்மியின் புகார்கள் குறித்து எழுத்துபூர்வமாக எவ்வித கடிதமும் வரப்பெறவில்லை என்று கூறியுள்ளார்.

எனினும், அனைத்து புகார்களையும் சட்டரீதியாக பரிசீலித்து வருவதுடன், வாக்குப்பதிவு சுதந்திரமாகவும், நியாயமாகவும் நடைபெறுவதை உறுதி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் மாநில தலைமை தேர்தல் அதிகாரி தெரிவித்துள்ளார்.

இதனிடையே தேர்தலை ஒட்டி தில்லியில் நடத்தப்பட்ட வாகன சோதனையின் போது, 36 லட்சம் ரூபாய் ரொக்கம், நகைகள், போதைப்பொருள், மதுபானங்கள் உட்பட சுமார் 2 கோடி ரூபாய் மதிப்புள்ள பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

கடந்த வாரம் விண்ணில் செலுத்தப்பட்ட இந்தியாவின் **NVS-02** செயற்கைக்கோளை அதற்கான சுற்றுவட்டப் பாதையில் நிலைநிறுத்துவதில் பின்னடைவு ஏற்பட்டுள்ளதாக இஸ்ரோ கூறியுள்ளது

இந்த செயற்கைக்கோளில் உள்ள உந்துசாதனம் செயல்படாத காரணத்தால், சுற்றுவட்டப் பாதையில் நிலைநிறுத்துவது தாமதமாகி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், செயற்கைக்கோள் தற்போது நீள்வட்டப் பாதையில் சுற்றி வருவதாகவும், அதன் பிற சாதனங்கள் நல்லமுறையில் இயங்கி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

இனி மகா கும்பமேளா குறித்த செய்திகள்..

(சவுண்ட் பைட் - **Song** – 8 நொடிகள்)

உத்தரப்பிரதேச மாநிலம் பிரயாக்ராஜில் நடைபெற்று வரும் மகா கும்பமேளாவில் இன்றும் லட்சக்கணக்கானோர் திரிவேணி சங்கமத்தில் புனித நீராடி வருகின்றனர்.

ஜுனா அக்காரா சுவாமி அவதேஷ் ஆனந்த் கிரி மஹராஜ் தலைமையில் சாதுக்கள் ஊர்வலமாக சென்று முதலில் நீராடினர்.

அவர்களைத் தொடர்ந்து மற்ற பக்தர்கள் நீராடி வழிபட்டனர்.

அசம்பாவிதங்களை தவிர்க்க துணை ராணுவப் படையினர் உட்பட 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பாதுகாப்புப் படையினர் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

சவுண்ட் பைட் - **Song** – 8 நொடிகள்)

>>>>><<<<<

இளைஞர்கள் புத்தகம் வாசிக்கும் பழக்கத்தை தொடர்ந்து பின்பற்றி, படைப்பாற்றல் சார்ந்த நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும் என்று தகவல் ஒலிபரப்புத்துறை செயலாளர் திரு. சஞ்சய் ஜாஜு கேட்டுக் கொண்டுள்ளார்.

போபாலில் நடைபெற்ற இலக்கிய மற்றும் கலைத்திருவிழாவில் பங்கேற்ற பின் ஆகாஷ்வாணி செய்திப் பிரிவுக்கு பேட்டியளித்த அவர், மூன்று நாட்களாக நடைபெற்ற இந்த திருவிழா நமது கலாச்சார சிறப்புகள மற்றும் பழங்குடியினரின் கலைத்திறனை வெளிப்படுத்தியிருப்பதாக கூறினார்.

தற்போதைய காலகட்டத்தில் இதுபோன்ற இலக்கிய திருவிழாக்கள் கலங்கரைவிளக்கமாக திகழும் என்றும் திரு. சஞ்சய் சாஜு குறிப்பிட்டார்.

>>>>><<<<<

காங்கோ நாட்டில் உள்நாட்டு கிளர்ச்சியாளர்களுடன் நிகழ்ந்த சண்டையில் கடந்த ஒரு வாரத்தில் 773 பேர் உயிரிழந்துள்ளனர்.

அந்நாட்டின் முக்கிய நகரான **Goma** பகுதியில் ருவாண்டா ஆதரவு தீவிரவாதிகள் நடத்தி வரும் தாக்குதலில் இவர்கள் உயிரிழந்துள்ளனர்.

>>>>><<<<<

இந்தியா - இங்கிலாந்து இடையேயான ஐந்தாவது மற்றும் இறுதி டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா 150 ரன் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றுள்ளது.

மும்பையில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில், முதலில் களமிறங்கிய இந்தியா 9 விக்கெட் இழப்பிற்கு 247 ரன் எடுத்திருந்தது.

அதிகபட்சமாக அபிஷேக் சர்மா 135 ரன் எடுத்தார்.

இதையடுத்து 248 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய இங்கிலாந்து அணி 10 புள்ளி 3 ஓவரில் 97 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

இதன்மூலம் ஐந்து போட்டிகளைக் கொண்ட இந்த தொடரை 4-1 என்ற கணக்கில் இந்தியா கைப்பற்றியுள்ளது.

ஆட்டநாயகனாக அபிஷேக் சர்மாவும், தொடர் நாயகனாக வருண் சக்கரவர்த்தியும் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

>>>>><<<<<

நெதர்லாந்தில் நடைபெற்ற சர்வதேச செஸ் போட்டியில் இந்தியாவின் பிரக்ஞானந்தா பட்டம் வென்றார்.

இப்போட்டியின் 14ஆம் சுற்றில் பிரக்ஞானந்தாவும், குகேஷும் தலா எட்டு புள்ளி ஐந்து புள்ளிகளுடன் சமநிலையில் இருந்ததால், டைபிரேக்கர் முறை பின்பற்றப்பட்டது

இதில் பிரக்ஞானந்தா, குகேஷை வீழ்த்தி பட்டம் வென்றார்.

>>>>><<<<<

சென்னை ஓப்பன் டென்னிஸ் போட்டியின் பிரதான சுற்று ஆட்டங்கள் இன்று தொடங்குகிறது. இப்போட்டிகள் வரும் 9ஆம் தேதிவரை நடைபெறும்.

>>>>><<<<<

ஐஎஸ்எல் கால்பந்துப் போட்டியில், நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் ஜாம்ஷெட்பூர் அணி 3-1 என்ற கோல்கணக்கில் கோவா அணியை வென்றது.

>>>>><<<<<

உத்ராகண்டில் நடைபெற்று வரும் தேசிய விளையாட்டுப் போட்டிகளில், சர்வீசஸ் அணி 17 தங்கம் உட்பட 33 பதக்கங்களுடன் முதலிடத்தில் உள்ளது.

இந்தப் பதக்கப்பட்டியலில் தமிழகம் 8 தங்கம் உள்ளிட்ட 26 பதக்கங்களுடன் ஆறாவது இடத்தில் உள்ளது.

>>>>><<<<<